# தமிழ்நாடு அரசு
# வேட்டைக்காரன்புதூர் (தேர்வு நிலை) பேரூராட்சி
## கோயம்புத்தூர் மாவட்டம்
# தூய்மை இந்தியா திட்டம் 2.0 (2021-2022)
# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண்.101/2021 நாள். 13.05.2022

வேட்டைக்காரன்புதூர் (தேர்வு நிலை)பேரூராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 - 2021–2022 ன் கீழ் கீழ்க்கண்ட வேலைக்கு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த சட்டம் 1998 மற்றும் அவ்வப்போது அரசால் பிறப்பித்த ஆணைகளின் படி இப்பேரூராட்சியில் பதிவு செய்து 2022–2023ம் நிதியாண்டிற்கு உரிமம் புதுப்பித்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து **25.05.2022** அன்று பிற்பகல் **3.00** மணி வரை கீழே கையொப்பம் இட்டவரால் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பெற உரிய தொகை செலுத்தி **25.05.2022** பிற்பகல் **3.00** மணிக்குள் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிக்கான டேவணித் தொகையை 25.05.2022 பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி உரிய இரசீதினை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும். தொகை செலுத்தாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 25.05.2022 பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்படும். இதர நிபந்தனைகளை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | டெண்டர் டேவணித் தொகை | டெண்டர் படிவ விலை |
|---|---|---|---|---|
| | **தூய்மை இந்தியா திட்டம் 2021 - 2022** | | | |
| 1 | வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட 10வது வார்டு சோமநாதபுரம் அரிசன காலனியில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல் | 15.00 | 15000 | 6000+ GST |

**<u>நிபந்தனைகள்</u>**

**1)** மதிப்பீட்டுத்தொகை ரூ. 5.00 லட்சம் மற்றும் அதற்கு மேல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்க விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி நமுனா நகல் எடுத்தும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம்.

இணையதள முகவரி : **, http://townpanchayats.tn.gov.in/tender** ,
https://tenders.gov.in

2) மதிப்பீடு தொகைக்கு 2% ஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகை செலுத்தப்பட வேண்டும்
3) ஒப்பந்தப்புள்ளி பேரூராட்சி மன்ற அங்கீகாரத்திற்கு பின்பே முடிவு செய்யப்படும்
4) செயல் அலுவலரின் முடிவே இறுதியானதாகும்
5) ஒப்பந்தபுள்ளி ஒப்புக் கொள்ளப்பட்ட மூன்று தினங்களுக்குள் ரூ. 20.00 மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தப் பத்திரம் எழுதி செயல் அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்
6) ஒப்பந்ததாரர்கள் செய்யப்படும் வேலைகளும், சப்ளை செய்யப்படும் சாமான்களும் விதிமுறைப்படி சம்மந்தப்பட்ட உதவிப் பொறியாளர், உதவி செயற் பொறியாளர் ஆகியோர்களின் அளவுகள் மற்றும் மேல் அளவுகள் செய்யப்பட்ட பின்னரே உரிய தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
7) ஒப்பந்தபுள்ளி யாதொரு காரணமும் காட்டாமல் ஏற்றுக் கொள்ளவோ, தள்ளுபடி செய்யவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு
8) ஒப்பந்ததாரர்கள் அவரவர் சமர்ப்பித்துள்ள சொத்து மதிப்பிற்கு உட்பட்ட தொகைகளுக்கு மட்டுமே பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

Sri Kala .S.

செயல் அலுவலர்
வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்

**பெறுநர்**

இப்பேரூராட்சியில் பதிவு செய்த தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள்

**நகல்**

1) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கோவை மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2) உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் துறை, கோவை மண்டலம்.

3)இளநிலை பொறியாளர், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி

4)தலைவர் அவர்கள், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி

5) விளம்பர பலகைக்கு